International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 04 October to December 2020 www.irjtsjournal.org

# பேராசிரியர் இரா. மோகனின் செவ்வியல் இலக்கிய ஆய்வுத்திறம்

முனைவர். செ. ரவிசங்கர்,
*உதவி பேராசிரியர்*
*ஒப்பிலக்கியத்துறை*
*தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைகழகம், மதுரை – 625 021.*

**முன்னுரை**

செவ்வியல் இலக்கியங்கள் தமிழர்களின் பழமையைப் போற்றி திகழ்கின்ற தமிழ் நூல்கள் ஆகும். தமிழர்களின் பெருமையை பறைசாற்றி நிற்கின்ற இலக்கியக் கருவூலமாகும். அத்தகைய சிறப்புப் பெற்ற செவ்வியல் இலக்கியங்களை தமது அறிவுநுட்பத்தாலும் புலமையாலும் பேராசிரியர் இரா. மோகன் தெளிவாக எடுத்துக்கொண்ட தலைப்பில் பொருத்தமான கருத்துக்களை ஒரு சேர தேர்ந்தேடுத்து ஆய்வு செய்து வழங்கியுள்ளார். அந்த வகையில் பேராசிரியர் இரா. மோகன் செவ்விலக்கியங்களை ஆய்வு செய்து வழங்கியுள்ள தன்மையை இக்கட்டுரையில் காணலாம்.

**சங்க இலக்கியச் சிறப்பு**

சங்க காலச் சான்றோர்களின் வாழ்க்கைகளிலும் சரி அவர்கள் தோன்றலாக இலக்கிங்களானாலும் சரி அவர்களை வாழ்க்கை, எண்ணம், சொல், செயல், கருத்தாழம் போன்றவற்றில் பல நுணுக்கமான சொல்வன்மை, பொருள்கள் இடம்பெறும். அவ்வாறே அவ்விலக்கியம் அவர்களின் சிந்தனை வெளிப்பாடக காலந்தோறும் போற்றப்படும் நூலாக வெளிவருகின்றன. நட்பாக இருப்பதும், பகைமையை வெளிப்படுத்துவம் கூட சிறந்த பண்பாக அமையும் அவற்றிலும் வீரம் முக்கிய பங்கு வகிக்கும் இவை எல்லாம் உள்ளத்து உணர்வாயினும் கூட இலக்கியங்கள் இவற்றை பலவித நுணுக்கம் கொண்டு அமைந்துள்ளன. ஆகவே இலக்கியம் சிறப்பு பெறுகிறது. வாழ்வின் உண்மையை இவ்வாறு கூறும்போது தான் இலக்கியம் செம்மையாகவும் செழுமையாகவும் மாறுகிறது என்பதனை பேராசிரியர் மோகன் அவர்கள் எடுத்துக் கூறுகிறார். குறுந்தொகையில் உள்ள சில பாடல்களைக் கொண்டு எட்டுத்தொகை நூல்களில் முதலில் அமைய பெற்றதும் தொகுக்கப் பெற்றதுமான இந்நூல் நல்ல குறுந்தொகை என்ற சிறப்பு அடைமொழியுடன் அழைக்கப்படுகிறது என்கிறார். அதற்கு காரணம் கூறும் போராசிரியர் இந்நூலில் வாழ்வதற்கு அடிப்படையான பொருள், இன்பம், இவற்றை தேடி சேமித்து பின்பு கூடி வாழ்வது குறித்தான பல செய்திகளை தலைவன், தலைவி, தோழி கூற்று வாயிலாகவும், எடுத்துரைக்கின்றார். தலைவியை பிரிந்து சென்று பொருள் தேடவேண்டும் எனும் போது மணமானது கலங்குகிறது. ஆனாலும் எதிர்கால வாழ்க்கைக்கு பொருள் வேண்டும் என்பதை.

> **“ஏதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்” எனச்**
> **செய்வினை கைம்மிக எண்ணுதி, அவ்வினைக்கு**
> **அம்மா அரிவையும் வருமோ**

**எம்மை உய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே" (63)** [1]

என்ற பாடலால் விளக்குகிறாா். அதாவது அறம் பெற வேண்டுமெனில் ஈதல் வேண்டும் வறியவா்க்கு கொடுக்க வேண்டும்.இன்பம் பெற வேண்டுமெனில் தலைவியை பிரிந்து செல்ல வேண்டும் எவ்வாறெனில் பொருளும், இன்பமும் கிடைக்க பிரிதல் நிகழக்கூடிய காலத்தில் தன் மனம் அமைதியில்லாத நிலையில் தலைவியை ஆற்றுவித்தல் பிரிதலை பொருளாக உடையதாகும் என்று தெளிவாக குறுந்தொகை பாடலை ஆராய்ந்து வெளிப்படுத்துகிறாா் பேராசிரியா் இரா. மோகன். ஈதல் ஆகிய அறமும், துய்த்தல் ஆகிய இன்பமும் பொருளால் ஆகும் என்ற கருத்தை தமது ஆய்வுத் திறத்தால் கூறுகின்றனா்.

**இலக்கியம் உணா்த்தும் நட்பு**

சங்க இலக்கியங்களில் புறநானூறு கூறும் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையாா் நட்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கோப்பெருஞ்சோழன் மெய்யுரையை கொண்ட புலவா்களுக்கு பல புகழினை உடையவன். அறவோா், புகழும் நீதி நூல்களை ஆராய்ந்து செங்கோலைச் செலுத்தியவன், சான்றோரால் புகழப்பட்ட திண்மையான நட்பையுடையவன. மகளிடத்து மென்மையாக ஒழுகுபவள் வலியோரிடத்து வலிமை விளங்க நடப்பவன் குற்றமில்லாத கேள்வி அறிவு உடைய அந்தணருக்கும் புகலிடமானவன் ஆயினும் வடக்கிருந்து உயிா்விட எண்ணியபோது தனது நண்பன் பிசிராந்தையாா் நட்பு குறித்து புலவா் பலவாறு இகழ்கின்றனா் ஆனால் கோப்பெருஞ்சோழன் கூறுவது.

**"கேட்டல் மாத்தி அல்லது யாவதும்**
**காண்டல் இல்லாது யாண்டு பல கழிய**
**வழு இன்று பழகிய கிழமையிற் ஆயினம்**
**அரிதோ தோன்றல்" அதற்படஒழுகல் என்று**
**ஐயங்கொள்ளனமின், ஆா் அறிவாளிா்**
**இகழ்விலன், இனியன், யாத்த நண்பனன்**
**புகழ்கெட வமூஉம் பொய் வேண்டலனே,**
**தன்பெயா் கிளக்கும் காலை, என்பெயா்**
**பேதைச் சோழன் "என்றும் சிறந்த**
**காதற்கிழமையும் உடையின், அதன் தலை,**
**இன்னது கா் காலை நில்லன்,**
**இனலே, வருகுவன், ஒழிக்க அவற்கு இடமே"**[2]

ஏன்னும் பாடலடிகளை நட்பிற்குத் தகுந்த சான்றாக எடுத்துக் கொண்டு மிகச்சிறப்பாக ஆசிரியா் தமது நூலில் எடுத்தாளுகின்றாா். நட்பின் இலக்கணத்தை ஆண்டுகள் பல ஆனாலும், என்னைப் பற்றிஅவன் பிறா் கூறகேட்டத்தின் வாயிலாக அறிந்திருந்தாலும் பிசிா் என்றும் தென் திசையில் பொதிய மலையை உடைய பாண்டிய நாட்டின் தலைவனான பிசிராந்தையாா் எம்மிடத்தில் செல்வம் உள்ளபோது வாராமல் இருக்கமாட்டான். புலவா்களே அவனுடைய அறிவு திறத்தில் ஐயப்படாதீா்கள் அவன் என்னை என்றும் இகழாத இனிய குணத்தினன் நெருங்கிய நட்பினை உடையவன். புகழ் அறியகூடிய பொய்யை விரும்பாதவன், தன் பெயராகக் கூறும் நெருங்கிய அன்புரிமை கொண்டவன் நான் துன்பம் மேற்கொண்ட காலத்தில் வராமல் இருக்கமாட்டாள் இப்போது அவன் வருவான்

அவனுக்கு ஒரு இடம் ஒதுக்கி வைப்பீராக என்று நட்பின் உன்னத்தை குறிப்பிடும் புறநானூறு பாடல்கொண்டு ஆசிரியர் உயர்வான நட்பினை விளக்குகிறார் மேலும்.

**“பொண்ணும், துகிரும் முத்தும் மண்ணிய**
**மா,மலை பயந்த காமரு மணியும்**
**இடைச்சேய ஆயினும், தொடை புணர்ந்து**
**அரு விலை நன் கலம் அமைக்கும் காலை,**
**ஒருவழித் தோன்றியங்கு என்றும் சான்றோர்**
**சான்றோர் பாலர் ஆப,**
**காலர் காலர் பாலர் ஆடுபவே:”**

பொன், பவளம், முத்து போன்றவை விளையும் மலை தந்த விருப்பதற்குரிய மணியும, அங்கென்றும் இங்கொன்னுமாக இடையே கோர்த்தாற் போல் கோவைப்படுத்தி, அரிய மதிப்படைய நல்ல அணிகலன்களைச் செய்யுங்காலத்து இவையெல்லாம் நன்கு சேர்ந்து காணப்படுவது போல பெரியோர் பெரியோர் பக்கத்தையே இருப்பர். பெருமையில்லாதவர். பெருமையில்லாதவர் பக்கமே இருப்பர். எனும்போது தன் நண்பனான கோப்பெருஞ்சோழனின் துன்பம் அறிந்து அவனிடம் பிசிராந்தையர் சென்று நட்பின் முக்கியத்துவம் பற்றி பேராசிரியர் இரா.மோகன் மிகத் தெளிவாக இன்றைய உலகில் நட்பு கேள்விக் குறியாக மாறியுள்ளதை விளக்கம் விதமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

**சங்கஇலக்கியத்தில் மாந்தர்களின் கடமை குறித்த ஆய்வு**

பேராசிரியர் இரா. மோகன் மாதர்கின் வாழ்வியலுக்குத் தேவையான கருத்துக்களை தமது நூலில் ஆராய்ந்துள்ளார். புறநானூற்று பாடாலாக பொன்முடியார் இயற்றும் வரிகள் கடமையை உணர்ந்து செயல் படவேண்டும் தாய், தந்தை, கொல்லல், அரசன், ஆண்மகன் ஆகிய ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது. அவற்றை சரிவர அவரவர் காலத்தில் செய்து முடிக்க வேண்டும் எனவும், சிறந்தவர்களாக வாழ வேண்டும் எனவும் சுறுகிறது.

**“ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்கடனே**
**நன்னடை நல்கல் வேந்தருக்கக் கடனே**
**ஒளிறுவான் அருஞ்சும் முருக்கிக்**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”[3]**

என்று இவ்வரிகள் உணர்த்துகின்றன. என்பதனை தமது நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். பிள்ளைகளை பெற்று வளர்த்து பாசகாப்பது தாயின் கடமை யெனவும், சிறந்தவர்களாகவும் ஆக்குவது தந்தையின் கடமையெனவும் படைக் கருவிகளையும் உருவாக்கிக் கொடுப்பது கொல்லரின் கடமையெனவும், நாம் ஒழுக்கத்தினை கற்பிப்பது. அரசனின் கடமையெனவும், ஒளி படைத்த விளைக்கினை கையில் ஏந்திப் போர்க்களம் சென்று பகைவரின் யானைகளைக் கொன்று வெற்றியுடன் திரும்புவது அம்மகனின் கடமை எனவும் இப்பாடல் உணர்த்துகிறது. இப்பாடல் உணர்த்தும் செய்தி யாதெனில் அவரவர் கடமை எற்ற காலத்தில் செய்து முடிக்க வேண்டிம் என்பதாக சங்க இலக்கியம் சுட்டுகிறது. என்று பேராசிரியர் கூறுகிறார் மேலும்

திருவள்ளுவரும் இதைக் கூறத் தயங்கவில்லை. பிறப்பிக்கும் போது மகிழ்ச்சியைக் காட்டிலும் ஒரு தாய் தன் மகனை சான்றோன் என்று பிறர் கூறும் போது மகிழ்வ கொள்கிறார். என்கிறார் திருவள்ளுவர்.

**“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை**
**சான்றோன் எனக்கேட்ட தாய்”[4]**

என்று ஆசிரியர் எடுத்துரைக்கிறார். ஒரு பெற்றோர் அடையும் மகிழ்ச்சி என்பது தன் பிள்ளைகளை சான்றோராக பார்க்கும் போது சிறந்த அறிவாளிகளாக பிறர் கூறும்போது தான் மகிழ்வு கொள்கின்றனர் என்பதாக கடமை குறித்து கூறப்படுகிறது. இது போன்ற சிறப்புக்களை சங்க இலக்கியப் பகுதியை முழுவதையும் உள்வாங்கி நமக்கு நூலாக வழங்கியுள்ளார்.

**பரிபாடல் உணர்த்தும் மனவலிமை**

மனவலிமை இல்லாமல் இன்று பலதுன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்பதால் பரிபாடல் கொண்டு ஆசிரியர் கருத்துரைக்கிறார். மனம் பண்பட வழி ஏதுவாக இருக்க வேண்டும் நமக்கு முன்னாள் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வரலாறுகளை படித்து அவற்றை வாழ்வில் அப்படியேப்பின்பற்றி வாழவேண்டம் இன்பம் துன்பம் இவற்றிற்கு ஏற்றவாறு மாறுபாட்டு மணம் அமையவேண்டும். சங்க இலக்கியமாக பரிபாடல் என்னும் நூலும் ஒரு புலவர் கடவுளிடம் வேண்டி நிற்கும் போது இறவைா நான் வேண்டுவது பொன், பொருள், போகம் இவற்றையல்ல அன்பு, அறம், அருள் இம்முன்றையே விரும்பி கேட்பதாக உரைக்கிறார்.

**யாலும் இரப்பபண்பை**
**பொருளும் பொண்ணும் போகமும் அல்ல,**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருளிணர் கடம்பின் ஒலிதாரோயே**

இவ்வாறு அவர் பொன் பொருள் போகம். போன்றவற்றை நினைத்தவாறு அடையமுடியாது. மனம் தொடர்பான அன்பு, அருள், அறம் இவற்றை விரட்டி முயன்றால் முயற்சிக்கும் ஏற்ப அடையமுடியம். ஏன்ற உண்மையை உணர்ந்து வேண்டினார். முனவலிமை எப்போது கிடைக்குமெனில் எந்தவொரு செயலையும் நிதானத்தோரும், யோசித்தல் பிறரை புண்படுதததி வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளும் போது ஏற்படும்

**“ஒறுத்தாருக்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தாலும்**
**போன்றுந் சளையும் புகழ்”**

இக்குறள் வழி நமக்கு துன்பம் தந்தவர்க்கு பழிக்கு பழி வாங்காமல், ஒரு நாள் பொறுமையை கடைப்பிடித்துவிட்டால், நாம் வாழ்நாள் முழுவதும் நமக்கு துணையாக புகுழும், மனவலிமையையும் வந்து சேரும் என்பதாகத் திருக்குறள் கூறுகிறது.

**பேராசிரியர் இரா. மோகனின் காப்பியப்பார்வை**

பேராசிரியர் சங்க காலத்திய நூல்களை எல்லாம் தமது அறிவுச்சிறத்தினால் மிகச்சிறப்பாக ஆராய்ந்துள்ளார் அதுபோலவே காப்பியங்களை ஆராய்ந்து எழுதும்போதும், பல அறிஞர்களது கட்டுரைகளை தொகுக்கும்போதும் அவருக்கே உரிய அறிவுத்திறத்தோடும் ஆய்வுத் தன்மையோடும் மிகச்சிறப்பாக தமது நூல்களில் எடுத்துக்காட்டியுள்ளார். மணிமேகலை குறித்து மணிமேகலைத்திறன் என்னும் ஒரு தொகுப்பு நூலை எழுதிய போது மணிமேலை நூலைப் பற்றி ஒரு முழுமையான பார்வையை இலக்கிய உலகிற்குக் காட்டும் நோக்கில் சாத்தனார் பாத்திறல், மணிமேகலையும் மது விலக்கும், மணிமேகலையில் தகவுகள், மணிமேகலையில் கல்வி நிறுவனங்கள் போன்ற கட்டுரைகளை ஒரு சேர நூலில் எடுத்தாண்டுள்ளார் ஒரு கருத்து குறித்த சிந்தனையை தேடி படித்து

அதனை மிக நேர்த்தியாக தொகுத்து தரும் ஆய்வுத்திறம் பேராசிரியர் இரா. மோகனின் பரந்த ஆய்வுப்பண்பினை காட்டுகிறது. இது போன்ற நுல்கள் இளைய தலைமுறையினரின் ஆய்வுக்கு முக்கியமான கருத்துக் கருவூலமாக திகழ்கின்றன.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகார காப்பியத்தினை அதன் தன்மையைக் கொண்டு காப்பியக் கட்டமைப்புத்திறன் என்னும் ஒரு ஆய்வினை நூலில் தந்துள்ளார்.பேராசிரியர் இரா. மோகன் ஐயா அவர்கள் ஒரு கட்டுரையை எழுத தொடங்கும் போது அறிஞர்களின் கருத்ததினை முதலில் முத்தாக கட்டுரைக்கு பொட்டு வைத்தது போல எழுதிச் செல்கின்ற வழக்கம் கொண்டவர் அது போலவே சிலப்பதிகார கட்டமைப்பினைப் பற்றி**"சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தங்கள் கதையை எம்மொழியிலிருந்தும் எந்நாட்டவரிடமிருந்தும் பெறவில்லை அவை தமிழ்நாட்டிற்கேயுரியவை. இந்நாட்டிலே தோன்றி வளர்ந்து நிலவிய கதைகள் இக்காப்பியங்களுக்கு இது ஒரு தனிச்சிறப்பாகும்,"**வி.அய் சுப்பிரமணியத்தின் கருத்தினைக் கூறி அதன்பிறகு கட்டுரையை தொடங்குகிறார். மேலும் அதே கட்டமைப்பினைப் பற்றி கூறம் போது தமது ஆய்வுப் பார்வையை வெளிப்படுத்துகிறார் அதாவது

**காப்பியக் கதை அமைப்பும் கட்டமைப்புத்திறனும்**

**"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு என்பது கவியராசர் பாரதியாரின் புகழாரம் இப்புகழகாரத்திற்கு முற்றிலும் தகுதி படைத்த காப்பியமாகச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இத்தகுதிப்பாடு சிலப்பதிகாரத்திற்கு அமைவதற்கான முழுமுதற் காரணங்கள் இரண்டு, ஒன்று அதன் கதை அமைப்பு சோழ நாட்டுப் பெண் ஒருத்தி பாண்டிய நாட்டில் தன் கணவனை இழந்து, சேர நாட்டில் பத்தினித் தெய்வமாக உயருவதைப்பாடும் கதை அமைப்பினைக் கொண்டதாகச் சிலப்பதிகாரம் விளங்குவது அதற்கு இயல்பாக அமைந்த தனிப்பெருஞ் சிறப்பாகும். மற்றொன்று மிகவும் சிக்கலான இக்காப்பியக் கதையினை இளங்கோ அடிகள் கட்டமைத்துச் சென்றிருக்கும் தனித்திறம் விழைவு வெறுப்பற்ற ஒரு சேரமுனி என்பதால் அரிதினும் அரிதான இத்திறம் அவருக்கு கைகூடியது எனலாம்"**.என்று தமது கருத்தை எழுதியுள்ளார் மேலும் சிலப்பதிகாரத்திற்கு பலரும் பல் வேறான பெயர்களைத் தந்துள்ளானர், குடிமக்கள் காப்பியம் மூவேந்தர் காப்பியம், மற்றும் பல ஆனால் பேராசிரியர் இரா. மோகன் புதுமையானதாக தமது நூலில் **நாயகி காப்பியம்** எனப் பெயரிட்டுள்ளார். அதற்கு தக்க காரணத்தையும் சான்றுகளையும் கொண்டு விளக்கியுள்ளார். "சிலப்பதிகாரம் நாயகிக்குச் சிறப்புத் தரும் காப்பியம் நாயகனை விட நாயகிக்கு ஒரு படி மேலாகத் தலைமை இடத்தினை நல்கும் தனித்தன்மை வாய்ந்த காப்பியம் இதற்கு ஏற்ற வண்ணம் காப்பிய நிகழ்வுகளைக் கட்டமைத்துச் செல்கின்றார் இளங்கோ அடிகள் ஓர் உதாரணம்சிலப்பதிகாரத்தின் முதல் காதையான 'மங்கல வாழ்த்துப் பாடலில் இயற்கை வாழ்த்து புகார்ச்சிறப்பு ஆகிய இரண்டினையும் தொடர்ந்து காப்பிய மாந்தர் அறிமுகம் இடம்பெறுகிறது. இதில் காப்பிய நாயகனான கோவலனை முதலில் அறிமுகம் செய்யாமல் நாயகியான கண்ணகியையே அறிமுகம் செய்கின்றார். இளங்கோ அடிகள் வயது அடிப்படையில் பார்த்தாலும் பதினாறு வயதான கோவலனின் பண்பு நலனைப்பற்றி முதலில் பேசாமல் பன்னிரண்டே வயதான கண்ணகியின் பெருமையையே விதந்து பேசுகின்றார் அடிகள். இதன் குறிப்பினைச் சிலப்பதிகார உரையாசிரியர்கள் இருவரும் நன்கு எடுத்துக்காட்டியுள்ளனர். "கண்ணகியை முன் கூறிற்று கதைக்கு நாயகியாதலின் என்கிறார் அரும்பத உரையாசிரியர் "கண்ணகியை முற்கூறினர் பத்தியை ஏந்துதல் உட்கோளாகலான், என்பது அடியார்க்கு நல்லார் தரும் அரிய உரை விளக்கம். நாயகி காப்பியம் அதிலும்

சிறப்பாகப் பத்தினிக்காப்பியம் என்பதற்கு 'ஏற்ற வகையில் கண்ணகியின் பாத்திரப்படைப்பினைத் திட்பமும் நுட்பமும் ஒட்பமும் விளங்கச் செதுக்கியுள்ளார். இளங்கோ அடிகள், கண்ணகி பின்னாளில் பத்தினித் தெய்வமாக உயரப்போவதை முன்னரே குறிப்பாகப் புலப்படுத்துவது போல் கோடிட்டுக் காட்டுவது போல் "மங்கல வாழ்ததுப் பாடலிலேயே மூன்று இடங்களில் கண்ணகியைக் கற்பில் சிறந்த அருந்ததியுடன் ஒப்பிட்டு அடிக்ள் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது."என்று விளக்கம் தருகிறார் இது புது ஆய்வுத்தலைப்பாகத் தருகிறார் .

காப்பியத்தில் இளங்கோ வடிகலின் தனித்தன்மையை மிகச்சிறப்பாக எடுத்துரைக்கிறார். அதற்கு சான்றாக"மதுரைக் காண்டத்தின் உயிர்நிலைக் காதையான 'கொலைக் களக்காதையின் முடிவில் கல்லாக் களிமகன் ஒருவன் வாளால் எறிய கோவலன் குருதி சோர மண்ணின் மாண்டு வீழ்வதைப் பாடும்போது,

**"மண்ணக மடந்தை வாள்துயர் கூரக்**
**குாவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்**
**கோவலன் பண்டை ஊழ்வினை உருத்துஎன்"** (வரி 215-217)

எனக் குறிப்பிடுவார். இளங்கோ அடிக்கள் 'மண் தேய்த்த புகழினான்'' எனத்தொடங்கும் கோவலனின் அறிமுகம் அவன் மண்ணக மடந்தை வான்துயர் கூர "வீழ்வதைச் சுட்டுவதோடு நிறைவு பெறுவது நோக்ககத்தக்கது. மண்ணில் தொடங்கிய கோவலன் அறிமுகம் மண்ணில் முடிவடைவது ஒரு நயம், நல்ல இயைபு காப்பியக் கட்டமைப்பித்த திறனில் இளங்கோ அடிகள் எத்துணைக் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பதற்குக் கட்டியம் கூறும் இடம் இது".எனக் குறிப்பிடுகிறார். இது போல சிலம்பு குறித்து மிகப்பெரிய ஆய்வினை வழங்கியுள்ளார் இத்தலைப்பே ஒரு முனைவர் பட்டத்திற்கான தலைப்பாகவும் பேராசிரியர் கொடுத்துள்ளார் உட்தலைப்புகள், ஆய்வேட்டின் இயங்களாகப்பிரித்து ஆய்வு செய்ய உகந்தாக அமைந்துள்ளது.

**உரையாசிரியர்களின் பல்துறை புலமை**

உரையாசிரியர் பற்றி மிக அருமையான 'உரைமரபு' என்னும் நூலைத் தந்தவர். அந்த அடிப்படையில் செவ்விலக்கியச் செழுமையில் உரையாசிரியர்களின் பல்துறைப் புலமை குறித்து ஒரு ஆய்வுப்பகுதியைப் பேராசிரியர் தந்துள்ளார் அதில"ஊரையாசிரியர்களின் எடுத்துக்காட்டுகள் என்பது ஒரு இளம் ஆய்வாளர் முனைவர் பட்டத்திற்கு மேற்கொள்ளத் தக்க ஓர் இன்றியமையாத தலைப்பாகும். உரையாசிரியர்கள் தரும் எடுத்துக்காட்டுக்களில் வரலாறு, நாகரிகம், பண்பாடு சமூகவியல் மொழியியல் வரலாற்றியல் நடையியல் தருக்கவியல் சட்டவியல் அறிவியல் நாட்டுப்புறவியல் முதலான பல்துறைகளின் பொருண்மைகள் இடம் பெற்றிருப்பது கண்கூடு. "நட்பின் உணர்ச்சி ஒத்த நிலைக்குத் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசராந்தையாருக்கும் இடையே நிலவிய உடன் உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினை மேற்கோள் காட்டுவார் பரிமேலழகர் 'வாய் வாளாது இருத்தலும் ஒரு வகை விடையே' என வாழ்வியலுக்கு தாய்க் கலாம்' என்னும் இளம்பூரணரின் உதாரணம் சமூகவியல் நோக்கில் அமைந்தது 'அல்லல் நீந்த உவகை ஏன்றதனால் பிறர் துன்பம் கண்டு வரும் உவகை, உவகை எனப்படாது'[5] என்னும் பேராசிரியர் விளக்கம் இன்றைய உளவியலார் 'sadism' எனக் குறிக்கும் கருத்துக்கு ஒத்துச் செல்வது".என்றுஉரையாசிரியர்களின் எடுத்துக்காட்டுக்களைக் கொண்டு சிறப்புச் சேர்க்கிறார். மேலும் தெய்வச்சிலையாரின் உரைத் திறனை மிகத் தெளிவாக தெய்வசிலையாரின் மொழியில் நோக்கு சமய, தத்துவ பயிற்சி போன்றவற்றை எடுத்துக் காட்டி எழுதியுள்ளார் மேலும் தனியிடம் பெறும்தெய்வசிலையறை சுட்டிக்காட்டுகிறார். இதில் பேராசிரியர் மிகத் தெளிவாக எதிர்கால மேலாய்வுக்களையும் சுட்டிக்காட்டியுள்ளார்

**முடிவுரை**

சங்க இலக்கியங்களாக அகம்,புறம் சார்ந்து இயங்கும் இலக்கியங்கள் போர், வீரம் காதல், வாழ்வியல், பொருளாதாரம், போன்ற கருத்துள்ள செய்திகளை வாழ்வின் கடைப்பிடித்து வாழவும் ஏற்றவாறு அமையப்பெற்றுள்ளன. என்பதை பேராசிரியர் தக்கசான்று கொண்டு ஆய்வுத்திறத்தோடு எடுத்தியம்புகிறார். மேலும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களையும் மிக நுட்பமாக ஆராய்ந்து எதிர்கால தலைமுறைக்கு புதுக் கருத்துக்களை எடுத்துக்காட்டுகிறார் மேலும் சங்க கால செவ்விலக்கியங்களை புரிந்து கொள்ள இந்நூல்களை எல்லாம் இளைய தலைமுறைக்கு பயன்படும் நூலாக அமைந்துள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

[1] செவ்வியல் இலக்கியச் செழுமை ப. 22
[2] செவ்வியல் இலக்கிய செழுமை ப. 16
[3] இலக்கிய அமுதம் ப. 192
[4] இலக்கிய அமுதம் ப. 193
[5] செவ்வியல் இலக்கியச் செழுமை ப. 18